தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயயச	மலர்
சஎ	பிரமாதீச, ஆனி	௩
	(1973 — ஜூன் — ஜூலை)	

முல்லைப் பாட்டு

திரு K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த தமிழ்மொழி, தலைவனது பிரிவை, அவன் வருந்துணையும் தலைவி நெஞ்சழியாது தலைவனையே நினைந்தவண்ணம் ஆற்றியிருக்கும் அகவொழுக்கத்தை முல்லையென வழங்கும். இவ்வக வொழுக்கத் தோடியையுடைய புறவொழுக்கம் வஞ்சியாகுமென்பது 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பியத்தான் பெறபபடும். போரின் பொருட்டு தலைவியைப் பிரிந்த தலைவன், பாசறையின்கண், தன் தலைவி, தானுற்றும் போர்த் தொழிலில் வெற்றிகண்டு மீளும் வரை ஆற்றியிருப்பாளென்ற திட எண்ணத்துடன், தன் தொழிலைத் திறனுக அமைதி நிறைவோடு செயலாற்றும் ஒழுக்கத்தைக் கூறுவது வஞ்சியாகும். இதனுன் முல்லைக்கு வஞ்சி புறனயிற்று முல்லை இடையருத காதலன்பு வாழ்க்கையினைக் குறிக்கும். வஞ்சி பலவினைகளுக்குரிய முயற்சி வேறுபாடுகளையும் வீரப்பெருஞ் செயல்களையும் உணர்த்தும். எனவே முல்லை காதலையும் வஞ்சி வீரத்தையும் விளக்குமென்பது பெற்ரும் இதனை விளக்க அமைந்தது முல்லைப் பாட்டு

'சான்ருேருரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டினுளே.' அகப் பொருட்டுறையினை நுதலியன மூன்றில் முல்லைப் பாட்டு ஒன்ருகும் முல்லைப்பாட்டு எனும் தொடர் முல்லைத் திணையைப் பற்றிய பாடல என இரண்டனுருவும் பயனும் உடன் தொக்கத்தொகையாக விரியும். இப்பாட்டினில் முல்லையோடு இயைபுடைய வஞ்சியை சிறப்புற இணைத்து நப்பூதனர் இன்பம் பயப்ப விளக்கி, தாங்கண்ட உலக இயற்கையின் நுட்பத்தையும் மக்களின் நடையினியற்கையின் இயல்பையும்

அமைத்து இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர் குறித்தார் பன்னலங்கெழுமிய இப்பாட்டு நூற்றுமூன்று அடிகளைக்கொண்ட சீரிய நேரிசை யாசிரியப் பாவால் இயன்றது.

முல்லைப்பாட்டு முல்லை சான்ற கற்பொழுக்கத்தை உணர்த்து கின்றது. பழங்காலத்து மகளிர், தெய்வக் காதல் முகிழ்க்கும் தம் கற்பின் மிகுதி தோன்ற முல்லைப் பூச்சூடுதல் இயல்பு. 'முல்லை சான்ற கற்புப் பொருந்தியதினுல் இல்லறம் நிகழ்த்து தற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருயென்று கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாமென்று கருதி இருத்தலென்றும் பொருள் தர முல்லையென்ற இச்செய்யுட்கு நப்பூதனுர் பெயர் கூறின மையின் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறவே அவர் கருத்தாயிற்று 'தானே சேரல்' எனும் (தொல்காப்பிய) விதியால் அரசன் தானே சென்றது இப் பாட்டு' என நச்சினுர்க்கினியர் இப்பாட்டின் பெயர் பொருத் தத்தினைப் பொருளுடன் சிறக்க நன்கு நிறுவி விளக்கியுள்ளார். இதனுன், புலமையெனும் தூரிகையை உணர்வெனும் வண்ணச் சாந்தில் தோய்த்து உள்ளக்கிழியில் முல்லைசான்ற காதற்கற் பின் உயிரோவியத்தை நல்லிசை சான்ற நப்பூதனுர் தீட்டி மெய்ப்பாட்டழகினைச் சுவைப் பொலிவுடன் வயங்க வைத்தா ரென்பது பெறப்படும்.

கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறம் செய்யும் கற்பினை முல்லை யென்ற சொல் உணர்த்துவதை

முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகளுறை வினுரே
(நற்றிணை—142)

முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
(சிறுபாணுற்றுப்படை — 30)

எனும் அடிகளான் அறியப்படும். முல்லை சான்ற கற்பினை வளர்த்து பயன் பெறச் செய்ய, தண்பறம்புநாட்டுக் கோமானு கிய பாரி தன் நெடுந்தேரை முல்லைக்கு நல்கியது, தமிழ் நயந் தெரிவாரால் உன்னற்பாற்று. கற்பில் நிற்பது மாரியாதலால், கபிலர் பாரியொடு மாரியினை ஒப்பாக்கிப் புகழ்ந்ததும் கண்டு கொள்ளப்படும்.

ஆசிரியர் தொல்காப்பியனுர் கருத்திற்கிணக்கமாகவே, நப் பூதனுர், தன் கலைப்புலமை வழி இம் முல்லைப் பாட்டினை முதல்,

கரு உரிப்பொருளென்னும் அகமும் புறமுமாய இயற்கைமுறையில், நுட்பதிட்பச் செறிவுடன் இயற்றியுள்ளார். முதற்பொருளென்பது நிலமும் பொழுதுமாகும் காரும் மாலையும் முல்லையென்க. இங்கு முல்லை நிலத்தின் இயல்பும், பெரும் பொழுதான கார் காலமும், சிறு பொழுதான மாலைக் காலமும் கவினுற புனையப்பட்டுள்ளன மண்ணுலக வுயிரினங்களுக்கு தெய்வம் பொதுவாதல் பற்றி அதனை முன்னிறுத்தி உணவு. மா, மரம், புள், பறையென யாவற்றையும் தொல்காப்பியர்

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதி யொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப

என அடுத்தோதினர் போன்று. நப்பூதனாரும் பாட்டின் தொடக்கத்திலே முல்லைக்குரிய தெய்வமாகிய திருமாலை உவமை முகத்தாற் கூறி, தலைப்பெயல் பொழிய கார்காலம் தொடங்கியது எனக் குறித்துள்ளார். திருமால், மாவலி மன்னர்பால் மூவடி மண்வேண்ட, அவன் அதற்கு அறிகுறியாக திருமால் கையில் நீர்வார்க்க, அதுபோது திருமால் நீரொழுகும் கையராய் ஓங்கி வளர்ந்து ஈரடியால் இரு நிலத்தை வளைத்தது போன்று. மேகம் கடல் நீரைப் பருகி வலமாக உயர்ந்தெழுந்து மலை முகடுகளைத் தழுவி உலகை வளைத்து பெரும் பெயல் பொழிய, பிரிந்தார்க்கு வருத்தஞ் செய்யும் மாலைக் காலம் வந்துற்றதை நப்பூதனர்

நனந் தலையுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மா அல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடு கொண்டெழுந்த கொடுஞ் செலவெழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை

எனக் கூறி. மாற்றுரை வெல்ல தலைவன் சென்ற போது, கார்காலம் தொடங்குமுன் தான் வருவதாக தலைவிக்குக் கூறிப் பிரிந்த செய்தியை மிக நயினமாகப் புலமை தோன்ற உணர்த்தியது நினைவு கூறற்பாற்று முதற் பொருளின் விளக்கமாகிய மாலைக்காலம் சிறத்தற்குரிய முல்லை நில நிகழ்ச்சிகளைப் பற்றி நப்பூதனர் நலம் பெற இசைத்துப் பின்னர் முல்லைக் குரிய இயற்கையின்ப எழிலை உளங்கனிந்து உவகை பொங்குமாறு அமைத்து.

செறியிலைக் காயா அஞ்சனமலர
முறி யிணர்க் கொன்றை நன்பொன்காலக்
கோடற் குவிமுகை யங்கைய விழத்
தோடார் தோன்றி குருதிபூப்பக்
கானம் நத்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்கு கதிர்வரகின்
திரிமருப் பிரலையொடு மடமானுகள

என கருப்பொருள்களின் சிறப்பியலினை உணர்ச்சி பெருக மொழிந்துள்ளார். இங்ஙனம் முதற் பொருளும் கருப்பொருள் களுமாகிய வற்றின் இயல்புகளை விளக்கமுறவும் உணர்வெதி ரவும் நப்பூதனுர் விரிவாகக் கிளந்து, தலைவன் தன் தலைவியை ஆற்றியிருக்கச் சொல்லுதலும் அதன்படி தலைவியாற்றி யிருத் தலுமாகிய உரிப் பொருளென்னும் அகப் பொருளை கற்போருள் ளத்தே நன்கு பதியுமாறு இன்னுேசை பொருந்த நன்கணம் அமைத்துள்ளார். மற்றும், 'மக்கணுதலிய வகனை ந் திணையுஞ் சுட்டி யொருவர் பெயர் கொளப்பெருஅர்' எனத் தொல்காப் பியர் நுவன்றவாறு, இம் முல்லைப்பாட்டில் தலைவன் தலைவி முதலியோர் பெயர் குறித்து. குறிப்பாலுங் கூடக் கூருததது அறியப்படும். 'வஞ்சி தானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி, முல்லையென்ற அகத்திணைக்கு இயைந்த புறவொழுக்கமாய் வஞ்சியினை, இப்பாட்டின்கண், நப்பூதனுர் அமைவுறப் பொருத்தி, தலைவியின் இருப்பினையும், பிரிவுத் துயரின் இரக்க வுணர்வினையும் திறம்பட மொழிந்து, பின்னர் தலைவன் தங்கியிருக்கும் பாசறையின் அமைப்பினையும், ஆங்கு உறக்கங் கொள்ளாது ஆற்றிய செயலைப் பற்றியும் விரி வாக எடுத்துக் காட்டியுள்ளார், 'கூதிர்வேனிலென் றிரு பாசறை' எனத் தொல்காப்பியர் கூறிய வாங்கு தலைவன் வேனிற் பாச றையில் தங்கி மீள்குவதையும் நப்பூதனுர் பொருத்தமுறக் கூறும் கருத்தழகு உள்ளத்தைக் கவர்க்கும் பான்மைதது. எனவே பொருளிலக்கண வல்லார் இப்பாட்டினை உற்று நோக் கின், தொல்காப்பியர் கருத்திற்கிசைய பொருளிலக்கண அமைப் பினை இப்பாட்டு தனக்கே யுரித்தாகக் கொண்டுள்ளத்தின் மாட்சி அன்னுர்க்கு நன்கினிது விளங்கு மாமெனக.

கார் காலத்தின் வரவைப் பெரும் பெயலொடு நப்பூதனுர் நனி நயம்பட எடுத்துக் காட்டி, பிரிந்தார்க்குப் பெருந் துன் பத் துயர் தரும் மாலைக் காலம் நெருக்கிற்றென யுணர்த்தி அதன் வழி, தலைவனைப் பிரிந்த தலைவி, முல்லை நிலத்து எழு நிலை மாடத்தில் பிரிவை ஆற்றியிருப்பது இன்றியமையாதலின்,

அத் தலைவியின் பிறிவாற்ருமையின் இரக்க வுணர்வை உருக்க முதிர நம் கண் முன் காட்டி சித்திரித்துள்ளார். தனிமைத் துன்பத்தைத் தாங்கயியலாத தலைவி, தன் கணவன் குறித்த காலம் வந்தும், தான் வாராமையால் மிக வருந்தி நிற்பதைக் கண்ட பெருமுது பெண்டிர் தலைவியை ஆற்றுவிக்கக் கருதி ஊருக்குப் புறத்தேயுள்ள மாயோனைக் கைதொழுது நெல்லையும் முல்லையும் தூவி, விரிச்சி கேட்க நின்றதும், அதுபோது ஆங்கு, ஓர் இடைக் குலப்பெண், பாலுண்ணுது வருத்தமிகுந்த பசுங் கன்றுகளை நோக்கி, 'வருந்தற்க உங்கள் தாய்ப் பசுக்கள் கோவலரால் பின்னின்று ஓட்டப் பெற்று இப்பொழுதே வந்து விடுவர்' என்ற நற்சொல்கேட்டு, அதனை தலைவர் தான் மேற் கொண்ட வினையினை முடித்து விரைந்து வருதற்குரிய நன்னி மித்த மொழியாகுமெனத் தலைவியிடம் உரைத்துப் பலவாறு ஆறுதல் புகன்றனர். இதனை,

'அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண்டார்ப்ப நெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்ப விழலரிதூ உய்க்கை தொழுது
பெருமுதி பெண்டிர் விரிச்சிநிற்ப
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயரலமரல் நோக்கி யாய்மகள்
நடுங்கு சுவலசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்றுய்த்தர
இன்னே வருகுவர் தாயரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்;

என நப்பூதனுர் உணர்த்தி. முல்லை நெய்தலின் பாற்படாத வாறு, தலைவி, பிறர் ஆற்றுவிக்க தன்னுளேதானே யாய்ந்து ஆற்றிக்கொள்ளும் இயல்பினை இனிது புலப்படுப்பர். ஆற்ருமை யுணர்வும், 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' என்றவாறு, தன் தலைவன் தன்னை ஆற்றியிருக்குர்படி அறிவுறுத்திய உணர்வுத் தலைவிபால் மனத்தடுமாற்றத்தைத் தோன்றச் செய்து அறிவை மயக்கினதை, தலைவியின் கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாய் துளிர்த்த வழி

'காட்டவும் காட்டவும் காணுள் கலுழ்சிறந்து
பூப்போலுண் கண்புலம்பு முத்துறைப்ப'

என்றவாறு தெளிவுறுத்துவாராயினர். தலைவியின் அகத் தெளிவினைத் தெரிவித்தற் பொருட்டு. நப்பூதனுர். தலைவியிருந்த

மாளிகையின் கூடல் வாயிலில், மழை பொழிந்த வண்ணமாக யிருந்ததால், நீர் சொரிந்து கொண்டிருந்த புற இயற்கையினை, புலனறிவின் துணையுடன் ஓவியமாய் உடன் பெய்து புலம் படைத்த புலவராய்த் திகழ்வாராயினர்.

இவ்வாறு தலைவி பிரிவுத் துன்பத்தால் தொடக்குண்டு துயருறும் அகநிலைமையினைக் கூறிச் செல்லுங்காலை, அகப் பொருள் திணையாகிய முல்லைக்கு புறத்திணை வஞ்சியாதலால், அதனைத் தொடர்புபட தக்க இடம் நோக்கி, நப்பூதனர், பாட்டியல் வழக்கில் வழங்கப்படும் 'மாட்டு' என்பதன் மூலம் பொருத்த முற இணைத்து தம் நல்லிசைப் புலமையினையும் நாட்டியுள்ளார். தலைவி, தலைவனைப் பிரிந்து மாளிகையின்கண் இருப்பது போன்று, பகைமேற் சென்ற தலைவன் பாசறை யிலிருக்கும் இருப்பைக் கூறப் புகுந்த நப்பூதனர், முதற்கண் கடல்போல் பரந்துபட்ட பாசறை அமைந்த நிலையையும் ஆண்டு நிகழும் செயல்களையும் விளக்குவாராயினர்,

மாற்றுரை வெல்ல நற் போரிலே சென்ற வேந்தனாகிய தலைவன் தான் ஏகிய, காட்டாறு சூழ்ந்த முல்லைக் காட்டினிடையே பிடவத்தையும் தூறுகளையும் வெட்டி வீழ்த்தி முள்வேலி யிட்டு பெரியதொரு பாசறையை அமைத்தனன். அப்பாசறையில் பல தெருக்கள் உள்ளன. தெருக்களில் வீரர்கள் தங்குமாறு கூரைகள் வேய்ந்த பல அறைகள் ஒழுங்காக வகுக்கப் பட்டிருந்தன. தெருக்களின் நாற்சந்தி கூடுமிடத்தில் காவலாக யானைகள் நிறுத்தப்பட்டிருந்தன அவ்யானைகள் தமக்கு இடும் கரும்பொடு கதிரும் அதி மதுரத் தழையினையும் உண்ணாது அவற்றை துதிக்கையாற்பற்றி தம் நெற்றிகளைத் துடைத்துக் கொண்டு. துதிக்கைகளை கொம்புகளின் மீது ஏற்றி வைத்துக் கொண்டிருக்க அவ் யானைகளை பாகர்கள் அங்குசத்தாற்குத்தி. 'அப்புது அப்புது. ஆது ஆது ஐ ஐ' என (அங்கையந்தலத் தினு லப்புதாவைதயென கொங்கலர் கண்ணியான் - சிந்தாமணி) வடசொற்களால் அதட்டி அவைகளுக்கு கவளம் ஊட்டினர்,

அப்பாசறையில் நால்வேறு படைகளுக்கு காவலிடமாக வில்லரண் அமைக்கப்பட்டுள்ளது. நிலத்தில் ஊன்றப்பெற்ற விற்களில் தூணிகளை தொங்கவிடப் பட்டிருந்தன. விற்களை நிலத்தினிலே நட்டு. கூடாரங்கள் அமைக்க, அவற்றைக் கயிற்றுல் வளைத்துக் கட்டப்பட்டிருந்தன. மற்றும் குந்தக் கோல்களை நட்டு அவற்றின் மீது கேடயங்களைப் படல்களாக வரிசையுற பிணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வகைப் படைகளும் தங்கு

மாறு அமைந்துள்ள அரணின் நாப்பண் அரசருக்கென ஓர் உள் வீடு சமைக்கப்பட்டுள்ளது. இது நீண்ட குத்துக்கால்க ளோடு பல்வண்ணத்து மதிட்டிரையை வளைத்து அமைக்கப் பட்டுள்ளது.

பாசறையில் ஆங்காங்கு வெளிச்சம் உண்டாக்க, விளக்கு கள் பல இருந்தன. அரசருக்குரிய இல்லில் விளக்குகள் அவியுந்தொறும் நெடுந்திரியைக் கொளுத்திக்கொண்டு அவற் றைக் காவலாளராக அமைந்த மங்கையர் எரியச் செய்தனர். விளக்கேற்ற நேரும்போது, அன்னார், காத்தற்றொழிலுக்கேற்ப ஏத்திய வாளைகச்சிலே பூண்பர். அவ்வாளின் ஒளியோ இர வையும் பகலாக்கும் பான்மையது.

பாசறையின்கண், நள்ளிரவில் பணி மடங்கும்போது மணியடிக்க எங்கணும் அமைதி ஆண்டது. மணிகளைக் கட்டப் பட்டுள்ள குதிரை யானை முதலியன உறங்கவே, அம்மணி களோசையும் அடங்கியது. நடுநிசியில் மெய்க்காப்பாளர்கள் தலைப்பாகை யணிந்து சட்டை தரித்து ஓங்கு நடையொடு கூடிய உழைக்கும் உண்மைத் தன்மையால் ஆங்கு காவலாகச் சுற்றித் திரிந்தனர். சிலவமயம் தூக்க மயக்கால் மோசி மல்லிகைக் கொடி சிதர்வரல் வளிக்கு அசைந்தாற்போல், அவர்கள் அசைந்தும் சென்றனர்.

பகற்போதெல்லாம் அரசன் போர்வினைகளை ஆற்றி, ஆய் தற்குரியவற்றை இரவில் நெடுவேளை ஆராய்கின்றமையால், அவன் துயிலுமாறு, இரவுப் பொழுதினை இத்துணையென அளந்து அறியும் பொய்யாமக்கள், அரசனை யணுகிக் கூப்பிய கையராய் வாழ்த்தி இராப் பொழுது இவ்வளவாயிற்றென அறிவிப்பர். கேட்ட அரசன் பள்ளியறையில் புகுவர். யவன ரால் புலிச் சங்கிலி விட்டு அழகுற அலங்கரிக்கப்பட்டு, அரச னுக்காக ஏற்பட்ட பள்ளியறையோ, காவலாளர் திரிகைக்குப் புறவறையும், அரசன் படுக்கைக்கு உள்ளறையுமாகத் திண்ணிய கயிற்றால் கட்டப்பட்ட திரையை வளைத்துப் புறமொன்று உள் ளொன்றுமாக ஈரறையாய்ப் பகுக்கப்பட்டிருந்தது. அரசன் படுக்கைக்குரிய உள்ளறையில் ஒள்ளிய மணி விளக்கு ஒளி வீசி விளங்கியது. புறவறையில், உடல் உறுப்புகளால் குறி காட்டித் தெரிவிக்கும் ஊமை மிலேச்சர்கள் சட்டையணிந்து காவலாகத் திரிந்தனர்.

(தொடரும்)

"எற்றமும் ஏற்றமும்"

ஒரு பாட வேறு பாட்டாராய்ச்சி

டாக்டர் இராம. சுந்தரம்.
வார்சாப் பல்கலைக் கழகம், போலந்து.

தொல்காப்பியச் சொல்லதிகார உரியியல் 39ஆவது நூற்பா

"ஏற்றம் நினைவும் துணிவுமாகும்" என்று பி. சிதம்பர புன்னைவன நாத முதலியார் பதிப்பித்த தொல்காப்பிய மூலத்திலும் (1922) க்ழகம் பதிப்பித்த தொல்- மூலத்திலும் (1954) காணப்படுகிறது "ஏற்றம்" என்ற பாடத்தையே இளம்பூரணரும் (கழகம் 1963) சேனுவரையரும் (கழகம் 1966; கு. சுந்தர மூர்த்தி (1966) தெய்வச்சிலையாரும் (கழகம் 1963) ஏற்று உரை வகுத்துள்ளனர். பி. எசு. சுப்பிரமணிய சாத்திரியாரும் தமது ஆங்கில மொழி பெயர்ப்பில் (அண்ணுமலைப் பல்கலைக் கழகம் (1945) இவ்வாறே பாடம் காண்கிருர். சி. இலக்குவனர் தமது நூலில் (Tholkappiyam with Critical studies) இதையே பின்பற்றுகிருர். நச்சினுர்க்கினியர் (கழகம் 1962) தஞ்சை சரசுவதி மகால், (1962) 'எற்றம் நினைவும் துணிவுமாகும்' என இந்நூற்பாவில் "எற்றம்" என்பதைப் பாடமாகக் கொள் கிருர். மர்ரே கம்பெனி பதிப்பித்த தொல். மூலத்தில் "எற்றம்" என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நச்சினுர்க்கினியர் 'எற்றம்' எனப் பாடம் கொள்வதைத் தெய்வச்சிலையார் உரை அடிக்குறிப்பிலும், கு சுந்தரமூர்த்தியின் சேனுவரைய உரை அடிக்குறிப்பிலும் குறித்துள்ளனர். கழக மூலப்பதிப்பில் எற்றம்' என்பது பாட வேறு பாடாகக் காட்டப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியும் "ஏற்றம்" என்ற சொல்லுக்கு 'நினைவு, துணிவு' எனப் பொருள் தந்து, தொல், சொல், 337 உரை என மேற்கோளும் தருகிறது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு நோக்குங்கால், "ஏற்றம், எற்றம்" என இரு பாடம் இருப்பது தெரியவரும்.

'ஏற்றம்' எனப் பாடம் கொண்ட இளம்பூரணர் "ஏற்றத் திருந்தார்" என்றக்கால் நினைத்திருந்தார் என்பதூஉம், துணிந் திருந்தார் என்பதூஉம் ஆம்" என்று எழுதுகிருர். சேனு வரையர் நினைவுக்கும் துணிவுக்கும் முறையே கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகளைத் தருகிருர்.

"கானலஞ்சேர்ப்பன் கொடுமை ஏற்றி"

எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்"

தெய்வச்சிலையார் தரும் மேற்கோள் :—

"கானலஞ்சேர்ப்பன் கொடுமையேற்றி" (குறள் — 145)

— இது நினைவு

"ஏற்றென்றிரங்குவ செய்யற்க" (குறள் — 655)

— இது துணிவு

பி. எசு. எசு சாத்திரியாரும் குறுந்தொகை 145 வது பாடலை யும் "யானேற்றமில்லாதேன்" என்ற பகுதியையும் காட்டு கிறார். நச்சினார்க்கினியர்

'கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி

'எற்றமிலாட்டியென் ஏமுற்றாள்' (கலித். 144. 63)

என உதாரணம் தருகிறார்.

தமிழ்ப் பேரகராதி, "ஏற்றம் — துணிவு" என்று குறித்து "ஏற்றமிலாட்டியென் ஏமுற்றாள்" என உதாரணம் தருகிறது. ஆனால் இதை எடுத்தாளும் நச்சினார்க்கினியரோ "எற்றம்" என்றே (எற்ற மிலாட்டியென் பாடம் கொண்டுள்ளார். பேரகராதி இவ்விடத்தில் இவ்வுதாரணத்தில் "ஏற்றம்" எனப் பாடம் கொண்டது எந்த ஆதார மூலத்தை அடிப்படையாகக் கொண்டது எனத் தெரியவில்லை.

குறுந்தொகை 145 ஆவது பாடலை இளம்பூரணர் தவிர்த்த ஏனைய உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். எல்லோ ரும் "ஏற்றி" எனத் தந்து நிற்க, நச்சினார்க்கினியர் மட்டும் "எற்றி" எனத் தந்து வேறுபடுகிறார் இச்சொல் நினைவுப் பொருளது என்பதில் யாரும் மாறுபடவில்லை. ஆனால், எற் றியா ஏற்றியா என்பதில்தான் சிக்கல். குறுந்தொகை உ. வே சா. பதிப்பில்

"கானலஞ்சேர்ப்பன் கொடுமை யெற்றி என்றே காணப் படுகிறது. இங்கு அவர் எற்றி என்பதற்கு நினைந்து எனப் பொருள் தருகிறார், மேற்கோளாக தொல். உரி. 41. சே, தெய் வச், 39 ந இ—வி. 282) காட்டுகிறார் சமாசம் பதிப்பித்த சங்க இலக்கியப் பதிப்பிலும் 'எற்றி" என்றே பதிக்கப் பெற் றுள்ளது. குறுந்தொகை 224 ஆவது பாட்டிலும்

"சென்றோர் கொடுமை யெற்றி" (உ வே சா. பதிப்பு) "எற்றி" என்பது நினைவு என்னும் பொருளிலேயே வந்துள் ளது. "தம்மோன் கொடுமை நம்வயின் எற்றி" என்று நற் றிணை 88 ஆவது பாட்டிலும் காணப்படுகிறது. (சமாசப் பதிப்பு)

குறிப்பிட்ட குறுந்தொகைப் பாடலில் "ஏற்றி" என்பது யாண்டும் காணப் பெறவில்லை. குறுந்தொகை நற்றிணைகளில் காணப் படும் இந்த மூன்று சான்றுகளைக் கொண்டு காணுங்கால் "எற்றி" என்பதே நினைவுப் பொருளில் வரும் சொல்லாகத் தெரிகிறது

சேனாவரையர், பி எசு. எசு. சாத்திரி காட்டும் "யானேற்ற மில்லாதேன்" என்ற தொடர் எங்குப் பயில்கிறது என்பது தெரியவில்லை.

இனி, தெய்வச்சிலையார் காட்டும் குறளை நோக்கலாம்.

இக்குறள்,

"எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

என்று பதிக்கப் பெற்றுள்ளது (திருக்குறள் — பரிமேலழகர் உரை, சக்தி வெளியீடு 1957; திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், காசிமடம், 1959; திருக்குறள் பரிமேலழகர் உரை. கழகம்; திருக்குறள்— மணக்குடவர் உரை. கா. பொன் னுச்சாமி நாட்டார் பதிப்பு 1925) இவ்வாறிருக்க "ஏற்று" என்ற பாடம் எங்கிருந்து கிடைத்தது? தெய்வச்சிலையார் தமது உரையில் ஏறத்தாழ 35 இடங்களில் குறட்பாக்களுக்கு உரை சொல்லுகிறார். இவ்வுரையெல்லாம் மணக்குடவர் உரையை ஒத்துச் செல்கின்றன. இக் குறளுக்கு (655) 'துணிந்து'; என உரை வகுப்பவரும் மணக்குடவரே (பரிப்பெருமாளும் காலிங்கரும் இக்கொள்கையினரே) ஆகவே மணக்குடவரைப் பின்பற்றித் தெய்வச்சிலையார் இங்கு "துணிவு' எனப்பொருள் கொண்டு. இதை எடுத்துக் காட்டுகிறார் எனலாம். ஆனால் மணக்குடவர் உரைப் பதிப்பில "எற்றென்று" எனத்தான் காணப்படுகிறதே தவிர "ஏற்றென்று" என தெய்வச்சிலையார் காட்டியிருப்பது போல—பாடம் காணப்படவில்லை. எவ்விதப் பாட வேறுபாடும் காட்டப்பெறவும் இல்லை. துணிவு என்ற பொருள் கொள்ளும் நிலையில் மணக்குடவரும் தெய்வச்சிலையாரும் ஒன்று படுகின்றனர். ஆனால் மூலப் பாடத்தில் இருவரும் வேறுபடுகின்றனர். எனின் மூலப் பாடம் எது?

"எற்று" எனப்பாடம் கொண்ட பரிமேலழகர் "எத்தன்மைத்து" என அதற்குப்பொருள் எழுதுகிறார். மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும் "எற்று" என்றே பாடம் கொண்டு, "துணியப்பட்டதென்று" எனப்பொருள் உரைப்பர் காலிங்கரும் துணிவுஎன்றே எழுதுகிறார். "ஏற்று" என்பது (தெய்வச்சிலையார்

கொண்டது) பாடமாக இருப்பின் பரிமேலழகர் உரைக்கு இட மில்லாது போகும். ஆனல் ''எற்று'' என்பது பாடமாக இருப் பின் இருவகை உரைக்கும்—''எத்தன்மைத்து' ''துணிவு''-இட மிருக்கிறது. .'எற்று'' என்பதைக் குறிப்பு வினை முற்ருகக் கொள்வார். பரிமேலழகர் அதனையே பெயர்ச்சொல்லாகக் கருதுவர். மற்றையோர். .'எற்றம்'' என்பதன் ''அம்'' ஈறு குறைந்து 'எற்று'' என நின்றதாகக் கொள்ளலாம். (ஒப்பு : குன்றம்—குன்று, நெஞ்சம்—நெஞ்சு)

மேலும். எதுகை அமைப்பும் ''ஏற்று'' எனப்பாடம் கொள்ளும் போது இசைந்து நில்லாது முரணி நிற்கிறது. அளவொத்த எதுகையாக அமையவேண்டுமாயின் இரண்டா மடியிலுள்ள மற்று என்பதற்கு ''எற்று'' என்பதே ஒத்த தாகும். எனவே ஈண்டு ''எற்றென்றிரங்குவ'' எனப்பாடம் ஓதலே சரியாகத் தோன்றுகிறது.

தொல்காப்பிய நூற்பாவின் மூலப் பாடத்தை நிர்ணயிப்பது இதனல் எளிதாகி விடுகிறது, உரையாசிரியர்கள் காட்டும் உதாரணங்கள் எல்லாம் 'எற்று'' எனப் பாடங்கொள்வதற்கே இசைவாக உள்ளன. ஆனல் உரையாசிரியர்கள் தொல்காப்பிய மூலத்தை ''ஏற்றம்'' எனக்கருதியமையால் மேற்கோள் பகுதியிலும் அதற்குத்தக ''ஏற்றம்'' ஏற்றி எனத் தந்துவிட்டனர். ஆனல் மேற்கோளாக காட்டப்படும் அடிகளையுடைய நூற்களில் ''எற்றம்'' என்பனவே காணக்கிடக்கின்றன. நச்சினர்க்கினியர் ''எற்று'' எனக்கொள்ளும் பாடம் இந்நூற்களில் காணலாகும் பாடத்தோடு ஒத்துள்ளமையும் குறிக்கத்தக்கதாகும் தொல்காப்பியத்தில் இக்குறிப்பிட்ட சூத்திரத்தில் ''ஏற்றம்'' என உரையாசிரியர்கள் எண்ணி எழுதியமைக்குக் காரணம் மூலத்தை ஏடு பெயர்த்து எழுதியோர் செய்த சிறு பிழையே யாகும். எகரமும் ஏகாரமும் வேறுபாடின்றி எழுதப் படுவது உண்டு. இடம் பொருள் நோக்கி பாடம் கொண்டு உரை எழுதுவதும் பதிப்பிப்பதும் மரபு. ''ஏற்றம்'' என பாடங் கொண்டு சில உரைகாரர்களும் ''எற்றம்'' எனபாடங் கொண்டு நச்சினர்க்கினியரும் உரை வகுக்கக் காரணம் அவர் தமக்குக் கிடைத்த ஏடுகளின் தன்மையைப பொறுத்ததாகும். நச்சர் கொண்ட பாடம் குறுந்தொகை கலித்தொகை நற்றிணை குறள் மேற்கோள்களோடு ஒத்துள்ளமை முன்பே குறிக்கப்பட்டது. ஆகவே இச்சூத்திரம்.

''எற்றம் நினைவும் துணிவும் ஆகும்''
என இருத்தலே பொருத்தமானதும் சரியானதும் ஆகும் எனத் தோன்றுகிறது.

திருக்கோவையாரும் திருவாசகமும்

வித்துவான் சு. சாமிஐயா, எம். ஓ. எல்.,
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

"பெருந்துறையிற் சிவபெருமானருளுதலும்
பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்து கரைந்திரு கண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்துபோந்து
திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல
வாய் மடுத்துத்தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூரடிகளடி
யிணைகள் போற்றி"

"மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப் பெருந்துறையே யென்று பிறப்பறுத்த" பெம்மான் உளங்கனிந்து உரைத்த நூல்கள் கோவைத் திருவாசகமாகும். எட்டாந் திருமுறையாக முறைப்படுத்தப்பெற்ற இவை பயில்வார் உள்ளத்தைக் கனிவிக்க வல்லன. ஒருமுறை ஓதுவாரும் உள்ளம் நெக்குருகித் திரு முறையில் நாட்டங்கொளப் பெருமுறை வகுத்த பாக்களே திரு வாசகமெனுந் தேனாகும். மற்று ஒருவாசகமாய்த் தித்திக்கும் தீந்தமிழாய், அகப்பொருள் எனும் அமிழ்து அளவியதாய்ப் பிறப்பறுக்கும் பெருமருந்தாய். அருமருந்தாய், வேட்டார் வேட்ட வண்ணம் கோட்டமில் பொருள் தரும் கருவூலமாய் ஞானப் பனுவலாய் மிளிர்வது திருக்கோவையார் எனும் செந்தமிழ்ப் பனுவலாம். இத்தகு அருள் நூல்கள் இரண்டினையும் ஒப்பிட்டு பார்க்கின்ற பெரும் பேற்றினுக்குத் திருவருளை இறைஞ்சு கின்றேன்.

அருள் நூல்கள் இரண்டினையும் ஒருவரே செய்தனரோ அல்லது இருவர் செய்தனரோ என்ற ஐயமும் அறிஞரிடை நிலவுகின்றது. ஐயம் தோன்றக் காரணமாய செய்திகளை முதலில் காணுதல் வேண்டும்,

1 பேரின்பப்பொருள் உரைக்கும் பெருவார்த்தை பேசு கின்ற வாதவூராளியா இத்தகு சிற்றின்பம் குறித்ததொரு நூலை யாத்தனர்? என்ற ஐயமும்,

2 திருமுறை கண்ட புராணத்துள், "அருள் திருவாசகம் ஒன்று" என்ற குறிப்பும்,

3 "திருவாதவூரர் முறை ஒன்று" என வரும் திருத்தொண்டர் புராண வரலாற்றுக் குறிப்பும் இவ் ஐயத்திற்குக் காரணம் ஆகலாம்.

திருக்கோவையார் சிற்றின்பம் மட்டுமே குறித்ததொரு நூலன்று. பேரின்பப் பொருளும் அகழ்ந்து பார்ப்போர்க்குத் தோன்றும் யாக்கை நிலையாமையை இளமை நில்லாமையை வைத்து விளக்குவதுபோன்று, சிந்தையுமொழியும், சிற்றறிவுடை நம்மனோர்க்குச் செல்லா நிலைமைத்தாகிய பேரின்பப் பொருளை அடிகளார் சிற்றின்பத்தை வைத்து விளக்கியுள்ளார். இதன் உரையாசிரியராகிய பேராசிரியர்.

"அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்கும்என
இருபொருளும் நுதலி யெடுத்துக் கொண்டனர்
ஆங்கு அவ் விரண்டனுள்,
ஆகம நூல்வழியின் நுதலிய ஞான
யோக நுண்பொருளை யுணர்த்துதற்கரிது."

எனக்கூறுகின்றார். இதனால், திருக்கோவையார் அறிவன் நூற்பொருள் உணர்த்தும் அரும் பெட்டகம் என்பது போதரும். இந்நூற்கு ஞானபரமான கொளு ஒன்று உண்மையும் இதனை வலியுறுத்துகின்றது "திருக்கோவையார் உண்மை விளக்கம்" என்னும் நூல் ஒன்று திருவாவடுதுறை ஆதினத்தின்கண் வெளிப்போந்துள்ளமையும் ஈண்டு நினைக்கத்தக்கது.

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும முழங்கும்" என்ற இலக்கணக்கொத்து

நூலாசிரியர் சுவாமிநாத தேசிகர் வாக்கும் இதன் உட்கிடையை நன்கு புலப்படுத்துகின்றது

"பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனக் காட்டிய ஒருபெருஞ் செல்வ"

என்ற செழுந்தமிழ் கவிஞராம் குமரகுருபர சுவாமிகளின் மும்மணிக்கோவைச் செய்யுளும் இக் கருத்தை அரண் செய்தலைக் காணலாம். எனவே இக்காட்டுக்களால் திருக்கோவையார் காமம் ஒன்றே பொருளாகக்கொண்டது அன்று என்பது இனிது விளங்கும்.

"திருச்சதக முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்தகலப் பொருட்கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனன்"

என்ற கடவுண் மாமுனிவர் கூற்றினுல் திருவாசகமும் திருக்கோவையாரும் அடிகளே செய்தனர் என்பது விளங்குகின்றது, இக்கருத்தினை அரண் செய்யும் பிற ஆசிரியர் தம் கருத்துக்களையும் காண்போம்.

"முழுதும்வளர் திருப்பணிசெய் திலகுதிருவாசகமு
மொழிந்து பாரோர்
தொழுதுசிர மேற்கொண்டு துதிப்பநிறை
கோவையார்த் துறைகள் யாவும்
பழுதுபடா தெடுத்துரைத்த வாதவூ ரன்பர்பதம்
பணிதல் செய்வாம்"

என வடுகநாதரும்.

"முந்துதிரு வாசகமா மணிக்குலத்தை மூதுலகோ
ரின்புறமா முகத்தாற்றுவி
யந்தமிலந் திணைதழுவு கோவைநின்று மகமகிழ
வரும்பொருளு மவனுக்கீந்து
வந்துபெருந் துறைபுகுந்து மலைபுகாத வாதவூர்த்
தமிழ்க்கடலை வங்ணகல் செய்வாம்"

எனப் பரஞ்சோதி முனிவரும்.

"சித்திரக் கோவை பாடித்தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்துரைப்பப் போந்தருந் தமிழ்கள்பாடி"

எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பியும்,

"தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளு நாயகனை"

எனச் சைவ எல்லப்பநாவலரும்,

"சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்மலே
மற்றெருப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனை"

எனக் கலிங்கப் புலவரும்

"வருவாசகத்தின் முற்றுணர்ந்தோனை வண்தில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்

பொருளார் தருதிருக்கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே ''

என நம்பியாண்டார் நம்பிகளும்,

'' திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்கவாசகர் இயற்றிய இருபெரும் நூல்கள். இவற்றுள் முதலாவது தன்னளவில் எட்டாந் திருமுறையாகக் கருதப்பெறுகிறது. இரண்டாவது அகப்பொருள் பற்றிய செய்யுள் ஆகும். நம்பியாண்டார் நம்பி தான் இயற்றிய கோவில் திருப்பணியார் விருத்தம் என்ற நூலில் இதை இயற்றிய ஆசிரியரைச் சிவப்படியார் என்று குறிப்பிடுவதினல் இவைகளின் ஆசிரியர் பற்றிய ஐயப்பாட்டிற் கிடமில்லை. ''

என்ற வையாபுரிப் பிள்ளை அவர்களின் கூற்றுலும்.

'' பொருணயந் தழுவிப் புனிதநல் வாக்கால்
திருக்கோவை யுள்ளிடுந் தேவரும் பரவத்
திருக்கோவை யாரினைச் செப்பினரஃதை
யிருக்கினுஞ் சிறந்ததா ஏற்றெம் பெருமான்
திருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியும் ''

எனத் தாண்டவராய சுவாமிகளும் கூறியுள்ள சான்றுகளால் கோவையாரை யாத்தவர் மணிவாசகப் பெருந்தகையே என்பது விளங்கும்.

''மன்புருவ நடுவாக மன்னுதவ முனிவோர் என்புருவாய் நின்று ஏமாக்க இன்புருவமாய எழில் வாதவூரர் பொருட்டு. எண் சுமந்த சேவகன் போலெய்தியதும், மண் சுமந்து நின்றதும். மாறன் பிரம்படியால் புண் சுமந்து கொண்டதும்'' ஆய நிகழ்ச்சிகளை இறைவன், '' கடையூழி வருந்தனிமை கழிக்க வன்றே அம்பலத்துள் உடையார்'' திருவாசகத்தில் ஒரு பிரதி கருதியன்றே மேற்கொண்டான்.

'' பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
கருவாதை யறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன் ''

என்ற திருக்கடவூர் உய்யவந்த தேவனர் கூற்றினல், விடையோனே பரியோனய் வந்து எலும்பூடு தேன்பாயக் கொடுத்த

அருள் இன்பினைத் தம்வாய்மலரால் சொற்செய்து கொடுத்துத் திருவாசகமெனும் ஒரு வாசகமாய்ச் செய்தனர் என்பதாம்.

நான்கு அகவல் உள்ளிட்ட ஐம்பத்தொரு பதிகங்கள் அருமணிகளெனக் கோக்கப்பெற்றுள்ளன. அகவல் நான்கும் கொண்டு 556 திருப்பாடல்கள் என்போரும் 558 திருப்பாடல்கள் என்போரும் உளர்.

" அருட் பெறும்அச் சோவொன்பான் நாற்பத்தேழ் பதிகம்
அகவலுடன்பாட்டறு நூற் றைம்பத் தாறே "

எனவும்,

" அருட்பெறுமச் சோவொன்ப தைம்பத் தொன்றும் பதிகம்
அகவலொடு செய்யுள் அறு நூற்றைம்பத் தெட்டே "

எனவும் கூறுகின்ற தனியன்களால் இருவேறு கருத்துக்களும் ஆதரவு பெறுகின்றன. திரு. வையாபுரிபிள்ளையவர்கள் தம் இலக்கிய வரலாற்றில் நான்கு அகவல்களும் 654 பாடல்களும் எனக்குறித்துள்ளார். ஆதலால் 658 என்ற தொகையினையே கொள்கிறார். பெரும்பாலான பதிப்புக்கள் 656 பாடல்களையே கொண்டுள்ளன. சில புராணங்கள் ஆறு நூறு என முழுத் தொகையினை மட்டுமே சுட்டியுள்ளன. முடிபாகக் கருதுமிடத்து 656 என்ற தொகையே கொள்ளுதல் ஏற்புடைத்தாம்.

திருவாசகத்தின் யாப்பமைதியை நோக்குங்கால் கலிவெண் பாட்டு, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியம், வெண்பா, கலிநிலைத்துறை, ஆசிரிய விருத்தம், கொச்சகக்கலி, கட்டளைக்கலித்துறை ஆய பல்வகைப் பாடல்களால் அமைந் துள்ளது மெய்யுணர்தல் 10 திருப்பாடல்கள், நீத்தல் விண் ணப்பம் 50 பாடல்கள், திருப்பாண்டிப் பதிகம் 10 பாடல்கள் கட்டளைக் கலித்துறையால் அமைந்துள்ளன. திருக்கோவை யார் 400ம் கட்டளைக் கலித்துறையால் அமைந்த நூலாகும். திருவாசகம் திருக்கோவை ஆய இரு பெரு நூல்களில் பாடல் தொகை ஆயிரத்து ஐம்பத்தாறாகும். இவற்றுள் நானூற்று எழுபது பாடல்கள் கட்டளைக்கலித் துறையாக அமைந்தவை. ஏறத்தாழப் பாதி அளவுக்குக்கட்டளைக் கலித்துறை இடம் பெறு வதை நோக்கும்பொழுது இப்பாடலில் அடிகட்கு ஈடுபாடு மிகுதி யாக இருந்திருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

கோவை என்பது பிற்காலத்து எழுந்த அகத்துறை நூலாகும். தனிநிலையிற் பாடப்பெற்ற நிலை சங்க காலத்துடன் முடிந்தது. "கோவை என்பது சங்க இலக்கியங்களின் பாவை எனவும், கோவை என்பது சங்க இலக்கியம் என்னும் பெரிய மாளிகையைக் கண்டு படியெடுத்த ஒரு வரைப்படமாகும். அம்மாளிகைக்குள் செல்லப்பயன்படும் வழிகாட்டியாகும், இலக்கியம் தோற்றிய இலக்கியமாகும்'' என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். கோவை நூல்கள் கற்றுக் கைவந்தவர்கள் சங்க அகப்பாடல்களை எளிதில் சுவைத்து இன்புறுதல் கூடும் "துயில் எடை நிலை'' பள்ளி எழுச்சிக்கு வித்தானாற்போல, "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'' என்ற பாடாண் பாட்டின் கூறு உலாவிற்கு முதலானாற்போல, கோவைகள் தோன்றுதற்கும் சங்க இலக்கியங்களே தூண்டுகோலாக அமைந்தன

400 பாடல்களுக்கும் 25 கிளவிக் கொத்துகள் காட்டப் படுகின்றன்.

திருவாசகம் எனும் தேனினையும், தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற நானூற்றினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் சுவை இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒருவரே யாத்தார் என்பற்குரிய அகச் சான்றுகளும் கிடைக்காமற் போகா.

ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதாகிய திருவாசகம் அருட்பாடல்களை அள்ளித் தெளித்தது. இதனுள் மணிவாசகப் பெருந்தகை தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் அமைத்துப் பாடிய பதிகங்கள் பலவாம். திருக்கோவையாரோ இறைவனை நாயகியாகவும், தம்மை நாயகனாகவும் அமைத்துப் பாடப்பெற்றது. இவ்வகையில் சிந்தித்தால் இருவேறு நிலைகளில் இறையருளில் அடிகள் ஈடுபட்டமை நன்கு புலனும்.

"வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும் நூறு நூருயிரம் இயல்பினது ஆக ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக் கூறுடை மங்கையும் தானும் வந்தருளி'' ; ஊன்தன்னை ஒருங்குடன் அறுத்து. ஆனந்தமே ஆரு அருளிய'' சீறார்களைக் கீர்த்தி திருவகவலில் தொகுத்துரைத்தும், பதிகங்கள் தோறும் நேருமிடங்களில் சுட்டிச்செல்கின்றமை யாவரும் அறிந்ததே. இந்நினைவு அடிகள் திருவுள்ளத்தில் மாறாமல் நின்று திருக்கோவையாரிலும் புலப்படக் காண்கின்றோம். " திருப்பனையூரில்

விருப்பன் ஆகியும்'' (கீர்த்தித் திருவகவல் 87 அடி) என்ற அடிக்கு விளக்கம்போல ''உம்பர் சென் குறத்திநிற்கும் திருப்பனையூரனை'' (திருக்கோவை 137 என்ற அடி விளங்கு கின்றது. பனையூரில் விருப்பொடு பல்கால் தங்குதலான் உம்ப ரெலாம் ஆண்டு வந்து அன்பு செய்து இன்புறுகின்றனர். ''குற்றாலத்துக் குறியாயிருந்தும் (கீர்த்தித் திருவகவல 91) என்ற பகுதி, குற்றாலத்துக் கோலப்பிண்டிப் பொழில்வாய்'' (திருக் கோவையார் 94) என்று மலர்கின்றது. ''ஏகம்பத்தின் இயல் பாயிருந்து'' (கீ 72) என்ற அடி ''மன் தங்கு இடை மருது ஏகம்பம் வாஞ்சியம் அன்ன பொன்னை'' (திருக்கோவை268) எனப் பொன்வண்ணத்தானைப் ''பொன்னை'' என்று, இயல்பாய் இருக்கும் அவன் திறத்தினைக் கூறுகின்றார். ''கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும் (கீர்த்தி 83 அடி) என்று குறிக்கப்பெற்ற கடம்பூர் ''தண் கடம்பைத் தடம் போற் கடுங் கானகந் தண ணெனவே'' (திருக்கோ. 220) எனத் தண்மைக்கு எடுத்துக் காட்டாக் கூறுகின்றார். பாண்டிய நாட்டினையும் மதுரையம்பதி யினையும் அடிகள் பலவிடங்களில் காட்டக் காண்கின்றோம். பாண்டிய நாட்டுத் தலைநகரை ''கடலின் ஆய்ந்த ஒண் தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ'' (திருக்கோவையார் 20) எனவும் ''திக்கின் இலங்கு திண் தோளிறை தில்லைச்சிற்றம் பலத்துக்; கொக்கின் இறக தணிந்து நின்றாடி தென்கடலன்ன'' (திருக்கோவை 376) எனவும் கூறுகின்ற இடங்கள் எண்ணி மகிழத்தக்கன. பெருந்துறை, பொதியில், ஈங்கோய்மலை போன்ற பல தலங்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

ஒருகால் ஓதினும் உருக்கும் இயல்பினைத் திருவாசகத்துக் காண்பது போலவே திருக்கோவையாரிலும் பலவிடத்துக் காண முடிகின்றது.

'மைத்தழை யாநின்ற மாமிடற்
றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற வன்பினர்
போல விதிர் விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா
வினைய்க் கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன
பாவம் பெரியவரே'' (திருக்கோவையா-102)

கையுறை கொண்டு வந்த தலைவனை நோக்கித் தோழி கூறிய தாக அமைந்தது இப்பாடல். கையில் வில் இல்லை, ஆனல்

அவனோ மதம்பட்ட யானை இவண் வந்ததோ என வினவினன். பித்தான சொற்களைக் கூறினன் கையிலே தழை வைத்துள்ளான். எனவே, இவன் கருமிடற்றான் கழற்கு அன்பு செய்து, பெருகிய அன்பினால் மெய் நடுங்கும் பத்தரைப்போலக் காட்சியளிக்கின்றான். பிச்சனாக்கினாய் என்றும், நாட்டார் நகைசெய்ய எனவும் தாம் பட்ட அனுபவங்களை நினைந்து "பித்தழையா நின்ற" என்ற தொடரினை இப்பாடலில் அமைத்துள்ளார் மெய்த்தழையா நின்று அன்பு செய்யும் இயல்பினைத் திருச்சதகப் பாடல் விளக்குகின்றது.

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன்விரை யார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே"

(திருவாசகம்—5)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்க்கின்ற மெய்யடியாரின் இயல்பினை இரண்டிடத்தும் காணலாம்

அடிகளார், உலகில் மிக மதித்துப் போற்றியது தாய் அன்பினையே. அதனினும் மேலாகக் கருதுகின்ற பொருள் இவ்வுலகில் வேறொன்றும் இன்று. பால்நினைந்தூட்டுந் தாயினும்" எனவும், "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" "அம்மையே அப்பா" என்றும் பல இடங்களிலும் குறிப்பர்.

மக்கள் நடை வழக்கில் உயிரே சிறந்தது என்பர். வள்ளுவரும் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பர். "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" எனக்கற்பினை வலியுறுத்துகின்றார் தொல்காப்பியர். உயிரினும் சிறந்தது என்றமையால் உயிர் உயர்ந்தது என்பது புலப்படும். மணிவாசகப் பெருந்தகையோ உயிரினும் சிறந்ததாகத் தாயினையே குறிப்பிடுகின்றார்.

தாயிற் சிறந்தன்று நாண்தைய
லாருக்கந் நாண் தகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண்
கற்பின் விழுமிதன்று"

(திருக்கோவையார் 204)

நாணம் தாயினும் சிறந்தது அதனினும் சிறந்தது கற்பு எனத் தொல்காப்பியர் தம் நெறியினைப் பின்பற்றி உரைப்பதும், அதில் ஒரு புதுமையைக் காட்டியிருப்பதும் எண்ணி மகிழ் தற்கு உரியது.

சொற்களைக் கையாள்வதிலும் நூலாசிரியர் தம் இயல்பை உணரலாம். சில சொற்களை, தன்குறி வழக்கம் மிக எடுத் துரைத்தல் என்றபடி பயின்று ஆள்வர் சிலர். அவ்வகையில் அடிகளார் "இறுமாக்க" "ஏமாக்க" என்ற சொற்களை அழகுறப் பல இடங்களில் ஆண்டுள்ளார். அடிகளைப் பாராட்ட வந்த இராமலிங்க அடிகளார்,

"மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வா ரெல்லாரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் னருளுருவ மடைந்துபின்னர்
இன்புருவ மாயினை நீ யெழில்லாத வூரிறையே"
(ஆளுடைய அடிகள் அருள்மாலை 3)

என "ஏமாக்க" என்ற கிளவியால் இவரை அடையாளம் காட்டுகின்றார்.

"பூமேல் அயனோடு மாலும் புகல் அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"
(திருக்கோத்தும்பி 234)

"ஏமாறிநிற்க" "இறுமாக்க" என்ற சொற்களைப் பலவிடங் களிலும் திருவாசகத்தில் பயன்படுத்திய அடிகள்,

"இறுமாப் பொழியுமன் றேதங்கை தோன்றினென்
எங்கையங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத் தான்றில்லை யூரன்றிண்டோள்
பெறுமாத் தொடுத்தன்ன பேரணுக்குப் பெற்ற பெற்றியினே
டிறுமாப் பொழிவ இறுமாப் பொழிந்த இணை முலையே"
(திருக்கோவையார் 373)

எனும் திருக்கோவையார் பாடலிலும் பயன்படுத்தியுள்ளார்,

அருள்வீழ்ச்சி எய்தியோர் சுற்றந்துறந்து, துணை துறந்து, ஊர்துறந்து கூட்டத்திடைக்கல் எறியப்பட்டால்

கூட்டம் கலந்து ஓடுமாறுபோல உலகத்துழனி யினின்றும் ஓடுவர்.

"வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப் பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி"
(திருக்கோத்தும்பி. 220)

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் றுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே"
(கண்டபத்து 477)

என்ற பாடல்களால் சத்திநிபாதம் பெற்றூர் உறும் நிலை நன்கு கூறப்பட்டுள்ளது. இதனைத் திருக்கோவையாரில்;

"சுற்றம் பலமின்மை காட்டித்தன் தொல்கழல் தந்த
தொல்லோன்
சிற்றம் பலமனை யாள்" (திருக்கோவையார் 346)

என்று சுட்டிச் செல்கின்றூர்

தம்மை ஒரு பெண்ணாக நினைந்து ஈசனிடத்துப் பேரன்பு செய்து நினைவெல்லாம் அவனாக, நடையெல்லாம் அவனாக, செயல் எல்லாம் அவனாக, எண்ணி யெண்ணி ஏங்குகின்ற நிலையினை

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச்சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்"
(திருவம்மானை 191)

எனப் பாடக் காண்கிறோம். கொன்றை மாலையினைப் பெற்றுச் சூடுகின்ற அவனோடு கூடுகின்ற, ஊடுகின்ற செவ்வாய்க்கு உருகுகின்ற, தேடுகின்ற, வாடுகின்ற ஒரு பெண்ணையே பார்க்கின்றோம் அல்லால் அடிகளைப் பார்க்கவில்லை.

"நேயத்த தாய்நென்ன லென்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங்
காயர னம்பலம் போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய
தாய்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி யிதோவந்து
நின்றதென் மன்னுயிரே"
(திருக்கோவையார் 39)

இப்பாடலில் இறைவனை ஒரு பெண்ணாகவே காண்கின்றார் அடிகள்.

அடிகளே ஒரு பருவப் பெண்ணை நயக்கும் காளையாகக் காண்கின்றோம் "இன்ப மறியுமியல் பன்றெனினும் நெஞ்சமணி யெலா நின்றெடுத்துறைத்தது" என்ற பேரின்பத்துறையில்,

"கயலுளவேகம லத்தலர் மீது தனிபவளத்
தயலுள வேமுத்த மொத்த நிரையான் அம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநீள தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தாங்கிப்புரள் வனவே"
(திருக்கோவையார் 35)

அமைந்த பாடலும் நினைக்கத்தக்கது.

இப்பாடல்,

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் பூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயித்தார்"

என்ற தடுத்தாட்கொண்ட புராணப் பாடலினை நினைப்பிக் கின்றது.

"நீங்கரும் பொற்கழற் சிற்றம்
பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு
மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந்
தேனும் பொதிந்து செப்புங்

கோங்கரும் புந்தொலைத் தென்னையு
மாட்கொண்ட கொங்கைகளே''
(திருக்கோவையார் 46)

''சித்தியெவையுஞ் சேர்ந்திடு மாயினும் இத்தகை இன்பம் இகழேன் என்றது'' என்பது இதன் பேரின்பப் பொருள்.

''கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல்
லானர கப்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே'' (திருச்சதகம் 6)

என்ற பாடலுடன் இணைத்துச் சிந்திக்கத்தக்கது

''திருவார்த்தை'' என்ற பதிகம் அமைத்ததுடன், மணியின் மணிவார்த்தை எனவும். திருவார்த்தை எனவும் திருவடிகளைக் குறிக்கும் நிலையினைப் பல விடங்களில் சுட்டுகின்றார். அதனை (திருவார்த்தையினை) அழகியதொரு உவமையாக்கித் தருகின்றார். கண்ணிணை பிறழ்கின்ற வண்ணம் உரைக்க வந்தவர் முற்றிலும் அவனிடத்துத்தாம் கொண்ட அன்பினைப் புலப்படுத்தும் நிலைகளையே உவமையாக்குகின்றார். அவனிடத்து இவர் கொண்ட அன்புபோல அகன்றும், அவன் வாங்கிய இவர் பாசம் போலக் கருத்தும், அவன் தில்லையின் ஒளிபோல ஒளிதந்தும். அவன் பூசும் திருநீறு என வெளுத்தும். அவன் பூங்கழலைப் பேசும் திருவார்த்தை போல நீண்டும் கிடக்கின்றனவாம் அவள் கண்கள். அதனை,

''ஈசற் கியான் வைத்த வன்பி
னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை
யின்னொளி போன்றவன் தோள்
பூசத் திருநீ றெனவெளுத்து
ஆங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங் கண்களே''
(திருக்கோவையார் 109)

என்று கூறுகின்றார் கண்களைக் கூற வந்தவர். கண்களின் இயல்பைச் சுட்டு முகத்தான் இறையிடு பாட்டை உவமை வகையால் கூறி அகப்பொருள் கருதாது அருளின் நலம் தோய்ந்து கூறும் அழகு வியந்து வியந்து போற்றத்தக்கது.

அகநூல்கள் இருவரும் ஒத்த அன்பினராய திறத்தை "ஓர் ஆவிற்கிருகோடு முளைத்தாற் போல" எனக் கூறுவர் அடிகள் ஈருடல் ஓருயிராய்க் கலந்த நிலையினைக் காகத்தின் இரு கண்களுக்கும் மணி ஒன்றே ஆனாற்போல ஓருயிரே கண்டனம் எனக் கூறுகின்றார்.

"காகத் திருகண்ணிற் கொன்றே
மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம்
யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும் பொழி
லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்
வருமின்பத் துன்பங்களே"

(திருக்கோவையார் 71)

இவ்வாறு உவமைகளைக் கையாள்வதில் ஒரு புதுமையும் பொலிவும் இருப்பதனைப் பலவிடங்களில் காண்கின்றோம். இருபக்கமும் துன்பம் சூழ்ந்து தப்பமுடியாத நிலையினை "இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி" என அகநானூறு உவமிக்கின்றது இதனை அப்பரும் "இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பென் உள்ளம் எங்ஙனம் கூடுமாறே" என ஒரு நிலையில் நில்லாத மனத்தினுக்கு உவமையாக எடுத்தாள்கின்றார் ஒரு மூங்கிலோ அல்லது கயிறோ தொங்குகின்றது. அதன் இரு பக்கங்களிலும் தீப்பிடிக்கின்றது. ஓட முடியாத தத்தளிக்கும் எறும்பு எவ்வாறேனும் தப்ப வேண்டும் என்னும் முயற்சியால், நடுவிடத்துள்ள பற்றுக் கோட்டினைத் தாவிப் பற்ற முயற்சிக்கும் இல்லையேல் நிலத்தில் குதித்துத் தப்பிக்கவும் கூடும் ஆதலால். "இருதலைக் கொள்ளியினுள்ளெறும்பொத்து நினைப்பிரிந்த விரிதலையேனை விடுதிகண்டாய்" என மணிவாசகப் பெருந்தகை நயப்படுத்தி உரைக்கின்றார். மூங்கிலின் உள் துளையிற் சென்ற எறும்பு மீண்டுவர எண்ணும்பொழுது இரு வாயில்களிலும் தீப்பற்றி எரிகின்ற நிலையினை உவமையாக்குகின்றார். அதனால் அன்றோ "அறிவாற்சிவனே" என்று பாராட்டப் பெற்றார்.

இரவின்கண் ஊர்ப்புறத்துச் சென்று பரத்தையர் இன்பத்தில் தோய்ந்து, பகலில் இல்லின்கண் உறைகின்ற தலைவன், திசை திசை தொறும் பறந்து சென்று பழுமரம் பார்த்துத் துய்த்துப் பகற் காலத்தில் ஒரு மரத்தின்கண் தொங்கும் வாவற் பறவை போல் இருக்கின்றான் என்பதனை, ''பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலு மன்னே'' (திருக்கோவையார் 375) என்று உவமிக்கின்றார். பகற்காலத்து அடங்கியும், இரவுக் காலத்து ஊக்கத்துடனும் திரியும் பறவையைப் பரத்தை தேரும் தலைவனுக்கு உவமையாக்கியது அருமையினும் அருமை யாகும்.

கல்லா மனம், கருங்கல்லாகிய மனம் ஆதலால் அதனை எளிதில் உருக்க இயலாது. ஆகவே முன்பே ஒரு பயிற்சி இறைவனுக்கு உண்டு எனக் கூறுவார் போன்று, ''தெவ்வரை மெய்யெரிகாய்சிலை யாண்டென்னையாண்டு கொண்ட, செவ்வரை மேனியன் சிற்றம்பலவன் (திருக்கோவையார் 114) என்ற பகுதி ''கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு என்னை நின் கழற் அன்பனுக்கினாய்'' (திருச்சதகம் 98) என்ற அடிகளுடன் ஒப்பிட்டு இன்புறத்தக்கது.

பல்கதிரோன் பல் தகர்த்தது, தக்கன் வேள்வியை அழித்தது, சந்திரனைத் தேய்த்து அருளியது. இந்திரனைத் தோள் நெரித்திட்டது, எச்சன் தலையரிந்தது, திசை திசையே தேவர்களை ஓட்டுகந்தது போன்ற நிகழ்ச்சிகள் இருபெரு நூல்களிலும் சுட்டப்பட்டுள்ளன

நெஞ்சம் நெக்குருக வைக்கும் திருவாசகமும், கோவைத் திருவாசகமும், கருத்து வகையால் பொருந்தியும். அழகில் ஒத்தும், உவமை அமைப்பில் சிறந்தும், புராண வரலாற்றுக் குறிப்புக்களில் நிறைந்தும், தலங்களைக் குறிப்பிடும் வகையில் ஒன்றியும், இரு பெரு நூல்களும் ஒரு பெரு நுலாகவே அமைந்திலங்கக் கண்டோம். அறிவாற் சிவனே எனப்படும் மணிவாசகர் தம்மை, வாழ்த்தி வணங்குவோம்

''தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்ட வல்லார்க்கே

என்ற சிவப்பிரகாசர் தம் கூற்றுக்கு நன்றி செலுத்துவோமாக.

கலை உரைத்த கற்பனை

(பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன், பி. எசி., எம். ஏ.)
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,

கலையுலகம் என்பது கற்பனை வளம் செறிந்த ஒரு தனி உலகம். 'கண்களில் தீப்பொறி பறந்தது' எனப் பேசுவது தான் கலையுலகத்து மொழி. ஆனால் அந்தத் தீப்பொறியைக் கொண்டு சூடத்தைக் கொளுத்தவோ சுருட்டைப் பற்ற வைக்கவோ முடியாது: பால்போல் நுரைத்துப் பொங்கும் கடல் தான் 'பாற்கடல்'. எனவே, இந்தியர்கள் பேசும் பாற்கடலில் இருப்பது பசுவின் பாலா, எருமைப் பாலா அல்லது சத்தூட்டப்பட்ட பாலா (Toned milk) என்று ஆராய்ச்சி செய்ய அயல் நாட்டு அறிஞர்கள் இங்கு வந்திறங்க வேண்டியதில்லை. முத்து. சிப்பியில் தான் பிறக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கலையுலகத்தில் இல்லை. கரும்பிலும், மூங்கில் கணுவிலும், யானை மருப்பிலும் அது பிறக்கும் இன்னும் சொல்லப் போனால் தலைவனை விரும்பி ஏங்கும் தலைவியின் கண்களிலும் கூட முத்துக்கள் மாலை மாலையாகத் தோன்றி உதிரும். மாணவர் உலகம் அரசியல் உலகம் என மக்கள் பேசுவது போன்றே தேவருலகம், நரகருலகம் எனக் கலையுலகம் பேசும். மாணவர் உலகத்திற்குச் செல்ல இராக்கெட் தேடுவதோ, அரசியல் உலகத திற்குச் செல்ல அந்தரத்தில் எழுந்து பிறப்பதோ நகைப்பிற்கிடமாகும் என்பதை நாம் அறிவோம். அவ்வாறே உயர்ந்தவர்கள் வாழும் தேவர் உலகம் என்றதும் கழுத்தை நிமிர்த்தி மேல் நோக்குவதோ, கீழானவர்கள் வாழும் நரகர் உலகம் என்றதும் தலையைத் தாழ்த்திக் கீழ் நோக்குவதோ பொருளற்ற செயலேயாகும். இருபத்து நான்கு மணிக்கு ஒரு முறை சுழன்று கொண்டிருக்கும் பூமியில் நாம் இருக்கின்றோம் பன்னிரண்டு மணிக் காலத்தில் தேவர் உலகம் இருந்த திசையில் நரகா உலகமும் நரகர் உலகம் இருந்த திசையில் தேவர் உலகும் வந்து விடும் இது வேதகால முனிபுங்கவர்களுக்கும் தெரியாத ஓர் உண்மையாகும்.

இறந்தவர்கள் எழுவார்கள் :

பிறப்பும் இறப்பும் வாழ்க்கைத் தத்துவத்தின் இன்றியமையாத இரு பக்கங்கள் என்பதை அறிந்த ஔவை மூதாட்டி,

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மானிலத்து ?

என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திச் சென்றிருக்கின்றார். இருந்தாலும் ஏசுநாதரும், காந்தியடிகளும், தொல்காப்பியரும் திருவள்ளுவரும் இறந்துவிட்டார்கள் என்பதை விட என்றும் பொன்றாமல் நம்மிடையே இருந்து வருகிறார்கள் என்பதில் தான் பொருளுள்ளது என்பதை நாம் நன்குணர்கின்றோம். அடியார் மனங்குளிர மயிலையம்பதியில் அன்னமிட்ட மென்கொடி பூம்பாவையை ஒரு பாம்பு கொன்றுவிட்டது என்பதோ, தமிழ் தவழும் மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டிய பேரறிஞர் அண்ணாவை ஒரு நோய் இல்லாமல் செய்துவிட்டது என்பதோ பொருளற்ற பேச்சாகும் என்பதை உலகமுணரும். தேவாரம் ஒலிக்குமிடத்தில் பூம்பாவை பொலிகின்றாள், தீந் தமிழ் தவழுமிடங்களிலெல்லாம் அண்ணா புன்னகை பூத்து நிற்கின்றார். செந்தமிழ்க் கற்பனை உலகம் 'செத்தார் எழுவார் என்று கைத்தாளம்' போடுவது நம் காதில் தேனையன்றோ பாய்ச்சுகின்றது. பொறிவாயில் ஐந்தவித்த ஏசுவும் ஆன்றவிந் தடங்கிய சான்றோர் பலர்காண வடக்கிருந்து வான்புகழ்கொண்ட கோப்பெருஞ் சோழனும் சாவினின்றும் விடுபட்டு எழுந்து என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் செம்மல்களே.

கற்பனையும் கருத்தாழமும் :

இன்று கருத்தாழத்துடன் கூடிய கற்பனையே காண்பதற் கரியதொரு காட்சியாக அருகிவிட்டது 'மாறில்லாப் பரிதி வட்டம்' என ஞாயிற்றைப் புலவர்கள் புகழ்ந்தாலும் திங்கள் வட்டத்தை மட்டும் 'அறுவாய் நிறைந்த அவிர்மதி' என்றே அழைக்கின்றார்கள் ஆம், திங்கள் மாதத்திற்கு ஒரு முறை தான் முழு வட்டமாகத் தோன்றுகிறது. மற்ற நாள்களில் அது அறுந்து கொண்டிருக்கும் தேய்பிறையாகவோ, நிறைந்து கொண்டிருக்கும் வளர் பிறையாகவோ இருக்கிறது இன்று அமெரிக்கர்கள் மண்ணைத் தோண்டத் தோண்டத் திங்கள் தேய்கிறது என்றும், அவர்களுக்குப் போட்டியாக உருசியர்கள் மண்ணைக் கொண்டு சென்று நிரப்ப நிரப்பத் திங்கள் வளரு கிறது என்றும் குழந்தைகளுக்குப் படம் போட்டு விளக்கும் அளவிற்கு நம் கற்பனை மேடிட்டு நிற்கின்றது ஆனால் பழந் தமிழர்களோ, அறிவியலை அடியாகக் கொண்டு பொருளாழம் மிக்க கற்பனையில் தோய்ந்து மக்கள் மனத்தில் தெளிவை ஏற் படுத்தியுள்ளனர்.

சிவமும் சக்தியும் :

செந்நிறம் படைத்த ஞாயிற்றைச் சிவம் என்று அழைப் பதினும் சிறந்த கலை நுட்பம் ஒன்றிருக்க முடியாது. தன்னொளி

யற்ற திங்களை உமை என்றனர். உண்மையின் புகழ் - திங்களின் பால்நிறத் தண்ணொளி — சிவனது புகழின் — ஞாயிற்றொளியின் பிரதிபலிப்பே என்பதை வற்புறுத்த வேண்டியே உமையின் நிறம் — திங்களின் உண்மை நிறம் கருப்பு என்றனர். ஞாயிற்றிற்கு எதிர்த் திசையிலிருந்தபடி ஞாயிற்றின் ஒளியைப் பால் நிறத் தண்ணொளியாகப் பட்டு மீளச் செய்து நிலவு பொழியும் முழுமதியானது ஞாயிற்றை நெருங்க நெருங்க ஒளிகுன்றி அறுவாய் மதியாகித் தேய்கின்றது. சிவனுக்கு எதிரில் நின்று 'சக்தி பெரிதா சிவம் பெரிதா?' என நம்மை நாமே கேட்டு மயங்கும்படி புகழ் கொண்டு திகழும் உமையும் சிவனை நெருங்கும்போது புகழ் மங்கிச் சிவனின் காலடியில் கலந்து உடம்பில் ஒடுங்கி விடுகின்றாள். ஆம். திங்களை அகத்தே அடக்கிக் காட்சிதரும் ஞாயிற்றையே மங்கை பாகனாகப் புலவர்கள் பாராட்டினர். உடலில் ஒடுங்கிய உமை பின்னர் சிவனின் ஒளிர் சடையில் முகிழ்த்துப் புகழ் வளரப் பெற்று மீண்டும் சிவனுக்கு எதிரில் வந்து முழுச் சக்தியாகப் புகழொளி வீசுகிறாள். ஆம், ஞாயிற்றின் அடிவிளிம்பைத் தேய்ந்தபடி சென்று தொட்டுப் புகு ஞாயிறு வட்டத்தைக் குறுக்கே கடந்த இருண்ட திங்கள் பின்னர் மேல் விளிம்பிலே மீண்டும் பிறையாக — வளர் பிறையாக வெளி வருகிறது. அதன் பின்னர் ஞாயிற்றிலிருந்து விலக விலக மேலும் நிறைந்து, ஞாயிற்றிற்கு நேர் எதிர்த் திசையில் வரும்போது முழுத் திங்களாகி விடுகிறது.

தட்சன் சாபமும் சிவன் அருளும்.

சிவத்தின் காலில் தேய்ந்தபடி சென்றுவிழுந்த 'சந்திரன்' சிவனின் தலையைச் சேர்ந்து வளர்ந்து வளம் பெறத் தொடங்கினான், என்ற 'தட்சயக்ஞக்' கதையும் இத்தகைய கருத்தாழம் மிக்க ஒரு வானநூற் கற்பனையே ஆம். வானத்திலிருந்து கண் சிமிட்டும் இருபத்தேழு விண்மீன் நல்லார்களிடைச் சுழல வேண்டி ஏற்பட்டதால் தான் திங்கட்செல்வன் சிவ ஞாயிற்றொளியை நெருங்கித் தேய்ந்தும் நீங்கி வளர்ந்தும் கொண்டிருக்கின்றான்.

இராவணனது தலையை எண்ண வேண்டாம்.

ஓர் உயிர்ப்பொருளுக்கு ஒரு தலை இருப்பது நல்லது! இருந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட தலைகளுடன் பிறந்து விடும் உயிர்களையும் நாம் காணாமல் இல்லை. பிரம்மனுக்கு நான்கு தலை, பிரம்மனைச் சிரத்தில் குட்டிச் சிறையிலடைத்த

குமரனுக்கு ஆறுதலை; பிரம்மனது மரபில் தோன்றித் திசை யெல்லாம் தானேயாகி நின்ற இராவணனுக்குப் பத்துத் தலை என்றெல்லாம் இலக்கியங்கள் எடுத்துரைக்கும் போது கலைத் திறம் புலவரின் கற்பனையிலேயே உள்ளது. தலைகளின் எண்ணிக்கையில் இல்லையென்பதைச் சுவைத்துணர நாம் கற்றுக் கொள்ள வேண்டும். திங்கள் நம் பூமிக்கு எப்பொழுதும் தன் ஒரு முகத்தையே காட்டி நின்றபடி சுழலுகிறது. அவ்வாறில்லாமல் பிரம்மன் நான்கு திசையிலுள்ளார்க்கும் தன்முகங் காட்டித் திசை மகனாய் அமர்ந்திருக்கிறான். திருக்குமரனே ஏறு மயிலேறி விளையாடும், இளம் பிள்ளையாக, இறைவனுடன் ஞானமொழி பேசும் அறிவுக்கொழுந்தாக, கூறும் அடியார்கள் தம் வினை தீர்த்த குணக்குன்றாக, பகைக்குன்று பிளந்துருவ வேல் வாங்கி நின்ற குமரனாக, மறத்தை வீழ்த்தி அறத்தை நிலைநாட்டிய ஆடவர் பெருந்தகையாக, குலம் நினையாக் கொள்கையனாய்க் கொடுங்கண் வள்ளியின் நலனுகர்ந்த நம்பியாகப் பல்வேறுபட்ட ஆறு முகங்களில் (In six different angles) காணுகிறான் இராவணனைப் பற்றியோ எண்ணவியும் பார்க்க வேண்டுவதில்லை வெள்ளியங்கிரியினை. விண்தொடும்படி அள்ளி எடுத்து ஆர்த்த வல்லவனாக, 'என்னையே நாடி நெடும் பகை தேடிக் கொண்டேன்.' என்று பொங்கிப் பூரிக்கும் வீரனாக, இளங்காளை இந்திரசித்தை இழந்து கண்ணீர் பெருக்கி மகவுத் துயரத்தில் மாழ்கும் தந்தையாக ஆனால் அதே நேரத்தில் அயலான் மனைவியானவள் 'பொன்னடி தொழத் தொழ' மறுத்துப் பேசும் புன்மையைப் புகழாகக் கொண்டு மயங்கும் பேதையாகவும் பல முகங்களில் இலங்கையர்கோன் நமக்குக் காட்சி தருகிறான். ஆம், பல்வேறு பண்பியலகளைப் பல முகங்களாகக் கொண்டு திகழ்வது தான் மனித உருவம்.

வானூர்மதியம் சகடணையுப் கற்பனை

'வானூர் மதியம் சகடணைய'

என்னும் சிலப்பதிகாரத் தொடருக்கு 'வானத்தில் ஊர்ந்து செல்கின்ற' திங்களானவன் உரோகிணியுடன் கூடும் நன்னாளிலே' என்று விளக்கம் சொல்கிறோம் இன்று மனிதன் அதே நாளில் திங்களில் அடிவைத்து நின்று கொண்டிருக்கின்றான். திங்களில் இருக்கும் மனிதனால் வானத்தில் திங்களைக் காண முடியாது. எட்டாத தொலைவில் இருந்தபடி கண் சிமிட்டிக் கொண்டிருக்கும் உரோகிணியை மட்டுமே காண முடியும். திங்களுக்கும் உரோகிணக்கும் உள்ள 'நெருங்கிய' தொடர்பு

அவ்வளவு தான். சற்று அருகில் நிற்கும் தூண் ஒன்று தொலைவில் இருக்கும் மரங்களைப் பின்னணியாகக் கொண்டு எப்படித் தோன்றுகிறதோ, அப்படித்தான் கோள்கள் விண்மீன்களுடன் கூடும் செய்தியும். கோள்கள் மிக அண்மையில் இருக்கின்றன விண்மீன்களோ நினைவுக்கும் எட்டாத நீண்ட தொலைவில் இருக்கின்றன விநாடிக்கு 1,86,000 மைல் ஓடும் ஒளி திங்களிலிருந்து நம்மை வந்தடைய ஒன்றேகால் விநாடியே ஆகிறது. ஆனால் மிகவும் அருகில் இருப்பதாகச் சொல்லப்படும் 'நெருப்பு' (Sirius) மீனிலிருந்து ஒளி நம்மை வந்தடைவதற்கோ ஐந்தாண்டுக் காலம் பிடிக்கின்றது. இந்த நிலையில் கோள்கள் எங்ஙனம் மீன்களோடு சென்று தங்க முடியும்? இருந்தாலும் சோதிடம் இந்தக் கற்பனையை நினைவெனக் கொண்டு தான் கண் மூடிச் சுழன்று கொண்டிருக்கிறது. சோதிடர்களின் இந்த நம்பிக்கைக்கும் உயர்ந்த கட்டடத்தைப் பார்த்து 'மதி அகடு உறிஞ்சும் சென்னி மாடம்' என்று பாடும் புலவர்களின் கற்பனைக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை.

அம்மையப்பரும் அர்தநாரீசுரரும்.

அம்மையும் அப்பனும் உணர்வால் ஒன்றியிருக்கலாம் அந்தக் கருத்தை வற்புறுத்த விரும்புவோர் அவர்தம் உருவங்களை அருகருகே வைக்கலாமே தவிர, உருவு திரித்து அவற்றை ஒட்டச் செய்து அர்தநாரீசுரராக்கிவிடுதல் அடுக்காது. அவ்வளவு ஏன்? மெய் ஒலியை அடுத்து உயிர் ஒலி எழுந்தால் அவை இயைந்து உயிர் மெய் ஒலி தோன்றும் என்பது உண்மையே அதற்காக மெய்வடிவத்தையும் உயிர் வடிவத்தையும் திரித்துக் கொம்பும், காலும், மேல் விலங்கும், கீழ் விலங்கும் பொருத்தி மொழியியலுக்கு முற்றிலும் முரண்பட்ட 'உயிர்மெய் உருவங்களைப்' படைத்துத் தமிழர் களில் நூற்றுக்கு எழுபது பேரை எழுத்துலகத்திற்கு வெளியே விட்டு வைத்திருப்பதும் ஓர் அவல நிலையேயாகும். ஆம்

'கலை உரைத்த கற்பனை'

என்ற இக்கட்டுரையின் தலைப்பும்,

'கலஐ உரஐததஅ கஅறபஅனஐ'

என்று அமைவதே அறிவியலை மணந்து வாழும் நம் காலத்துத் தமிழுக்கு வளர்ச்சி தருவதாக இருக்க முடியும். இயற்கைக்கு ஒவ்வாத இன்றைய 'உயிர் மெய்' வடிவங்களை மறந்து விடுவோமானால், மெய் எழுத்துகளுக்குப் புள்ளியிட வேண்டிய தொல்லையும் இல்லையாகி விடுமன்றோ?

(96-ம் பக்கம் பார்க்க)

திருக்குறட் கருவூலம்

(வேண்டுதல் வேண்டாமையிலான்)

(நக்கீரன் வழியடிமை. வித்துவான்
பி. மா. சோமசுந்தர முதலியார், இராணிப்பேட்டை.)

க உரைவளம்

" வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில். "

என்பது குறள். உரைகாணும் அறிஞர்கள் தம்மை எண்ணில் அணிவிரல் முடக்கு,வொட்டா அரும்புலமை சான்ற உரையாசிரியர் பரிமேலழகர் இக்குறளுக்கு வகுத்த உரையாமாறு:

" ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா என்றவாறு.

பிறவித் துன்பங்களாவன: தன்னைப் பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையான் வருந்துன்பங்கள். அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின் அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின, "

பரிதியாரும் காலிங்கரும் கண்டவுரைகளும் இப்பொருட்டனவேயாம் 'சேர்ந்தார்க்கு' என்ற பாடத்தைச் 'சேர்ந்தார்' எனவும், 'இல்' என்ற பாடத்தை 'இலர்' எனவும் மணக்குடவர் கொண்டு பொருள் உரைப்பர். "வேண்டுதல் வேண்டாமையிலான்" எனற்கு "இன்பமும் வெகுளியும் இல்லாதவன்" என்று உரை கூறிப் "பொருளுங் காமமும் ஆகா என்றற்கு' வேண்டுதல் வேண்டாமையிலான்' என்றுபெயரிட்டான்" என்று விளக்கமும் உரைப்பர்

உ. முத்திறத்துன்பங்கள்

பிறவியினெய்தும் முக்கூற்றுத் துன்பங்களையும் முறையே காண்பாம் ஐயும். பித்தும். வளியும். மிகுந்துங் குறைந்தும். வெப்பு. குன்மம், கொடுஞ்சூலை முதலாம் பிணிகள் பலவுமுற்று நைதல். இவை தன்னைப் பற்றி வருவன.

காதலர்ப்பிரிவு, மக்களாலெய்தும்துன்பு. மாக்களாலுறுந் துன்பு, அல்கையான் அடையும் அணங்கு. கள்வரான்நேரும் இழப்பு. அரக்கரான் உறும் அலக்கண். அறம்வளர்த்தற்கண் சேரும் அலைக்கழிவு, செல்வ நுகர்விற் சேரும் செல்லல், அயலவர்தம் அறிவு. உரு. திரு எனும் இவற்றான் எழும் அழுக்காறு, ஆசையாற் கூடும் மாசு. பெருஞ்சினப் பிணிப்பால் பிறக்கும் பீழை என்றாற்போல்வன பிற உயிர்களைப் பற்றி வருவன.

இவை தம்முள், காதலர்ப்பிரிவு சிறுபிரிவு, பெரும் பிரிவு என இருவகைப்படும். களவிற்பிரிவும், கற்பிற்பிரிவும் சிறுபிரிவின் பாற்படும். இவற்றுக்கு இலக்கியம் பழந்தமிழ் நூல்களிற் கண்டு கொள்க. வெள்ளிவீதியார் ஆதிமந்தியார் போன்ருர் பிரிவுங்கருதுக. "பல்சான்றீரே பல்சான்றீரே, செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்" எனவரும் புறப்பாட்டு பெருப் பிரிவுக்குச் சான்ருகும். அப்பாடலை இயற்றிய பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பெரும்பிரிவான் பைதலுற்றவராவர்.

மக்களால் துயருற்ருேர் கோப்பெருஞ்சோழன், பாரி, தயரதன் முதலியோர். மக்களாலுறுந் துன்புகளை

"மதலையைப் பெறுநாட் டுன்பம் வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம் வியன்பரு வத்துந் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றிற் கணக்கி றுன்பம்
இதமுற லெந்நாட்சேயா லெற்றைக்குந் துன்ப மானுல்"

என்று மகாவித்துவான். மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குசேலோபாக்கியானத்தில குயிற்றல் ஓர்க.

இனி. மக்களென்பது, கேளிர், கேளார், விருந்து, வேந்தர், அரசு பணியாளர் முதலியோரையுந் தழுவி நிற்குமாகலான், அவர் தம்மால் அணுகுந்துன்புகளையும் இன்னணமே ஆய்ந்து கண்டு கொள்க. (தொடரும்)

(94-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கண்மூடி வழக்கம்.

கலையுரைத்த கற்பனையை நிலை எனக்கொள்வதைக் கண்மூடி வழக்கம் என்று இராமலிங்க அடிகள் கூறி மக்களை எச்சரிக்கின்ருர்; அச்செயல் குழந்தைகளின் அறிவியல் உள்ளத்தையே பாழ்செய்து விடுவதால் அது மண்மூடிப் போக வேண்டும் என்றும் வலியுறுத்துகின்ருர். இன்று நாம் அடிக்கடி கேள்விப்படும் மறு பிறப்பு எடுத்த மகவு, கருவில் கதை பேசும் குழந்தை உண்ணுது உயிர் வாழும் மங்கை, பூமியைப் பிளந்து புறப்படும் கற்சிலை போன்ற 'அற்புதங்கள்' எல்லாம் கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொள்வதால் எழுகின்றவையே. அறிவியல் ஒளியின் முன்னர் அவை யாவும் இயக்குவோர் பின்னின்று தூண்ட நாணுல் உயிர் மருட்டும் பொம்மலாட்டங்களாகி விடுவதைக் காண்கின்ருேம். இத்தகைய 'அற்புதங்'களைக் கேட்டுக் குழம்பும் குழந்தைகளைப் பார்த்துப் பெற்ருேரும் ஆசிரியரும் 'கேழ்வரகில் நெய் வடிகிறது என்ருல் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று?" என்ற அறிவியல் மொழியினை நினைவூட்டித் தெளிவிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்!